## அவசரக் கூட்டம்

கூட்ட எண் – 13 / 2019 திருத்தணி நகராட்சி,
நாள்: 09.08.2019

நிகழும் விளம்பி ஆண்டு, ஆடி – 24, திருவள்ளுவர் ஆண்டு 2050 நாள் 09.08.2019 வெள்ளிக் கிழமை மாலை 5.30 மணிக்கு திருத்தணி நகராட்சி அலுவலகத்தில் அவசரக் கூட்டத்தில் தனி அலுவலர் அவர்களின் தலைமையில் நடைபெறும் கூட்ட நடவடிக்கைகள்.

தனி அலுவலர் (ம) ஆணையர்
திருத்தணி நகராட்சி.

**பொருள் எண்– 1**

அரசு முதன்மைச் செயலாளர், நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை அவர்களின் தலைமையில் நடைபெற்ற TURIP 2019–20–க்கான திட்ட அனுமதி வழங்கும் குழுவில் இந்நகராட்சிக்கு சாலை பணிகளை மேற்கொள்ள கீழ் கண்டவாறு நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது விவரம் வருமாறு.

| நகராட்சியின் பெயர் | மதிப்பீட்டு தொகை | தமிழ்நாடு நகர்புற சாலைகள் மேம்பாட்டு திட்ட மானிய நிதி | மாநில நிதிக்குழு / மத்திய நிதிக்குழு மானிய நிதி / நில அபிவிருத்திக் கட்டணம் | நகராட்சி பங்களிப்பு |
|---|---|---|---|---|
| திருத்தணி நகராட்சி | 5.00 கோடி | 1.00 கோடி | 3.00 கோடி | 1.00 கோடி |

மேற்படி இந்நகராட்சிக்கு தமிழ்நாடு நகர்புற சாலைகள் மேம்பாட்டு திட்டத்தின் கீழ் ரூ.5.00 கோடியில் பணிகள் மேற்கொள்ளவும், மதிப்பீட்டு தொகையில் தமிழ்நாடு நகர்புற சாலைகள் மேம்பாட்டு திட்ட மானிய நிதி ரூ.1.00 கோடியும், மாநில நிதிக்குழு / மத்திய நிதிக்குழு மானிய நிதி / நில அபிவிருத்திக் கட்டணம் ஆகியவற்றிலிருந்து ரூ.3.00 கோடி மற்றும் நகராட்சி பங்களிப்பு ரூ.1.00 கோடி என நிதி பங்கீட்டு செய்து கடிதம் வரப்பெற்றுள்ளது, மேற்படி 2019–20–ல் நகராட்சியின் பங்களிப்பு ரூ.1.00 கோடி மற்றும் மாநில நிதிக்குழு / மத்திய நிதிக்குழு மானிய நிதி / நில அபிவிருத்திக் கட்டணம் ரூ.3.00 கோடி மூலம் பணிகள் செய்ய இந்நகராட்சியில் போதிய நிதி வசதிகள் இல்லாத காரணத்தினால் பொது மக்கள் பயன்பாடு மற்றும் போக்குவரத்திற்கு மிகவும் சிரமாக உள்ளதால் பழுதடைந்த சாலைகளை ரூ.3.00 கோடி மதிப்பீட்டில் சீரமைத்து தார் சாலை அமைக்க தயாரிக்கப்பட்டுள்ள மதிப்பீடு மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

| வ.எண் | பணியின் பெயர் | சாலையின் நீளம் (கிலோ மீட்டர்) | மதிப்பீட்டு தொகை ரூ.லட்சத்தில் |
|---|---|---|---|
| 1 | T – புதுர் முதல் அருந்ததியர் காலனி இணைப்பு சாலை, வெற்றிவேலா நகர் மற்றும் நல்லாண்குளம் தெரு ஆகியவற்றில் உள்ள சாலைகளுக்கு தார் சாலை அமைத்தல் பணி. | 3.44 | 200.00 |
| 2 | பி.எம்.எஸ் நகர், குமரன் நகர், செந்தமிழ் நகர், கலைஞர் நகர், சார் கருவூலம் அலுவலக சாலை மற்றும் காந்தி சாலை மெயின் ஆகியவற்றில் உள்ள சாலைகளுக்கு தார் சாலை அமைத்தல் பணி. | 2.33 | 100.00 |
| | மொத்தம் | 5.77 | 300.00 |

அலுவலக குறிப்பு :–

1. மன்றம் அனுமதி வழங்கலாம்.
2. மேற்கண்ட மதிப்பீட்டு தொகை ரூ.300 லட்சத்தினை தமிழ்நாடு நகர்புற சாலைகள் மேம்பாட்டு திட்டத்தின் கீழ் நிதி பெற்று பணி மேற்கொள்ள நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்களுக்கு பிரேரணை அனுப்ப மன்றம் அனுமதி வழங்கலாம்.
   (ந.க.எண்.1167/2018/இ1)

**பொருள் எண்– 2**

திருவள்ளூர் மாவட்டம், திருத்தணி வட்டம், திருத்தணி நகராட்சி சென்னை நகரிலிருந்து 85 கி.மீ தொலைவில் அமைந்துள்ள இரண்டாம் நிலை நகராட்சி ஆகும். இந்நகராட்சியின் மொத்த மக்கள் தொகை 2011 கணக்கெடுப்பின்படி 44781 ஆகும். இந்நகராட்சி 12.42 சதுர கி.மீட்டர் பரப்பளவில் 21 வார்டுகள் உள்ளடங்கியது. இந்நகராட்சியில் புகழ் பெற்ற அருள்மிகு சுப்பிரமணிய சுவாமி திருக்கோயில் அமைந்துள்ளது. இந்நகராட்சி பெறும் மொத்த மழை அளவு சராசரியாக 1064 மி.மீ. எனவும், கடந்த ஆண்டு மொத்த மழை அளவு 820.5 மி.மீ என பதிவாகியுள்ளது. தற்போது பருவ மழை பொய்த்துள்ளதால், இந்நகரத்தில் போதிய நிலத்தடி நீராதாரம் இல்லை.

இந்நகரில் மழை காலங்களில் பெய்யும் மழை நீரானது மலை மேலிருந்து கீழாக நில நீர் வாட்டம் வழியாக வழிந்தோடி நிலையில் உள்ள குளங்களில் தேங்கி நிலத்தடி நீர் மட்டம் உயரும் வண்ணம் பூலோக ரீதியாக அமைந்துள்ளது, அவ்வாறு அமைந்துள்ள 1) வார்டு எண்.20, சர்வே எண்.88/3 , அமிர்தாபுரம் காலனி குட்டை, 2) வார்டு எண்.20, சர்வே எண்.354/2, அமிர்தாபுரம் பொது சுடுகாடு அருகில் உள்ள குட்டை, 3) வார்டு எண்.15, சர்வே எண்.337/1 வண்ணார் குட்டை 4) வார்டு எண்.20, சர்வே எண்.249 வனதுர்கையம்மன் கோயில் குட்டை 5) வார்டு எண்.12, திரௌபதியம்மன் கோயில் குளம் 6) வார்டு எண்.5, ரெட்டி குளம் 7) வார்டு எண்.11, சர்வே எண்.263, அம்மனேரி குட்டை 8) வார்டு எண்.11, சப்பானி குட்டை ஆகிய குளங்களுக்கு வரும் வழித்தடங்களான கால்வாய்கள் மற்றும் குளங்களை தூர்வாரியும் மராமத்து பணிகள் மேற்கொண்டு மழைநீர் சேகரிக்க உத்தேசிக்கப்பட்டுள்ள பணிகள் மேற்கொள்ள மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு –

1. அனுமதி வழங்கலாம்.
2. இப்பணிகளை மேற்கொள்வதற்கு அரசின் நீர்மேலாண்மை (JAL SHAKTHI ABHIYAN)திட்டத்தின் கீழ் நோபல் ஃபவுண்டேஷன் (Nobel foundation) அமைப்பின் மூலம் மேற்கண்ட திட்டத்தில் பணிகள் மேற்கொள்ள மாவட்ட ஆட்சித் தலைவர், திருவள்ளூர் அவர்களுக்கு பிரேரணை அனுப்ப மன்றம் அனுமதிக்கலாம்.
3. மாவட்ட ஆட்சியர் திருவள்ளூர் அவர்களின் கடித ந.க.எண்.1872/19/A2 நாள்.18.07.2019–ல் வார்டு எண்.11, சுப்பிரமணியபுரம் குளம், வார்டு எண்.20, செட்டி குளம், வார்டு எண்.20, திரேளபதியம்மன் கோயில் குளம், வார்டு எண்.20, கொட்டு குளம், வார்டு எண்.20, நல்லாண் குளம் ஆகிய குளங்களை தூர்வாரியும் மராமத்து பணிகள் மேற்கொள்வதற்கு அரசின் நீர்மேலாண்மை (JAL SHAKTHI ABHIYAN)திட்டத்தின் கீழ் நோபல் ஃபவுண்டேஷன் (Nobel foundation) அமைப்பின் மூலம் பணிகள் மேற்கொள்ள கடிதம் வரப்பெற்றுள்ளதை மன்றம் பார்வையிட்டு பதிவு செய்யலாம்.
   (ந.க.எண்.1118/2019/எப்1)

**தனி அலுவலர் (ம) ஆணையர்**
**திருத்தணி நகராட்சி.**

## சாதாரணக் கூட்டம்

**கூட்ட எண் – 14 / 2019** **திருத்தணி நகராட்சி,**
**நாள்: 30.08.2019**

நிகழும் விகாரி ஆண்டு, ஆவணி – 13, திருவள்ளுவர் ஆண்டு 2050 நாள் 30.08.2019 வெள்ளிக் கிழமை மாலை 5.00 மணிக்கு திருத்தணி நகராட்சி அலுவலகத்தில் சாதாரணக் கூட்டத்தில் தனி அலுவலர் அவர்களின் தலைமையில் நடைபெறும் கூட்ட நடவடிக்கைகள்.

**தனி அலுவலர் (ம) ஆணையர்**
**திருத்தணி நகராட்சி.**

**பொருள் எண்– 1**

ஆணையர் அவர்களின் ஜுலை – 2019 மாத நாட்குறிப்பு மன்றத்தின் பார்வைக்கும், பதிவிற்கும் வைக்கப்படுகிறது

**அலுவலக குறிப்பு : –**
மன்றம் பதிவு செய்யலாம்.

**பொருள் எண்– 2**

திருத்தணி நகராட்சியின் பிறப்பு, இறப்பு பதிவுகள் மற்றும் இறந்து பிறந்தவை பதிவுகள் மன்றத்தின் பார்வைக்கும், பதிவிற்கும் வைக்கப்படுகிறது.

| வ.எண் | மாதம் | பிறப்பு | இறப்பு | இறந்து பிறந்தவை |
|---|---|---|---|---|
| 1 | ஜுலை – 2019 | 56 | 20 | – |

**அலுவலக குறிப்பு : –**
மன்றம் பதிவு செய்யலாம்.

**பொருள் எண்– 3**

இந்நகராட்சியின் வரி மற்றும் வரியில்லாயினங்களின் வரவினம் மற்றும் செலவினம் விவரம் மன்றத்தின் பார்வைக்கும், பதிவிற்கும் வைக்கப்படுகிறது.

| மாதம் | வரவுகள் (ரூ.இலட்சம்) | செலவு சீட்டு எண். | செலவுகள் (ரூ. இலட்சம்) |
|---|---|---|---|
| ஜுலை – 2019 | 22.11 | SFC A/c 29 முதல் 45 வரை | 52.50 |
| | | RF A/c 30 முதல் 41 வரை | 18.17 |
| | | CF A/c 25 முதல் 27 வரை | 7.11 |
| | 0.79 | Amma A/c 11 to 18 வரை | 4.35 |

**அலுவலக குறிப்பு :–**
மன்றம் பதிவு செய்யலாம்.

**பொருள் எண்– 4**

இந்நகராட்சியில் அவசர அவசியம் கருதி கீழ் கண்ட பணிகளை தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகளின் சட்டம் 1920 பிரிவு(15)ன் கீழ் பணி மேற்கொண்டு முடிக்கப்பட்ட விவரம் மன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கும் வைக்கப்படுகிறது.

| வ.எண் | பணியின் பெயர் | செலவு சீட்டு எண். | பணி முடிக்கப்பட்டு செலவிடப்பட்ட தொகை. ரூ |
|---|---|---|---|
| 1 | அமிர்தாபுரம் காலனி, அனுமந்தாபுரம், அமிர்தாபுரம், ஜெ.ஜெ ரவி நகர், எம்.ஜி.ஆர் நகர் ஏரி, பாப்பிரெட்டி பள்ளி ஏரி மற்றும் ஆதிசங்கரர் நகர் ஆகிய பகுதிகளில் உள்ள ஆழ்துளை கிணற்றில் கூடுதலாக இரும்பு குழாய் பொறுத்தும் பணி | CF BPV 40/27.08.2019 | ரூ.92,757/– |

<u>அலுவலக குறிப்</u> பு :–

மன்றம் பதிவு செய்யலாம்
(ந.க.எண்.87/2017/இ1)

**பொருள் எண்– 5**

இந்நகராட்சியில் அமைக்கப்பட்டுள்ள உயிரி எரிவாயு அமைப்பிற்கு மாவட்ட சுற்றுச்சூழல் மற்றும் மாசுக்கட்டுப்பாட்டு வாரியம், திருவள்ளூர் அவர்களின் 29.08.2019–ந் தேதிய தொலைபேசி தகவளில் Pollution Act – 1974–ல் NOC சான்று பெறுவதற்கு ஓர் ஆண்டிற்கு கட்டணம் ரூ.43,600/– வீதம் 2018 –19 மற்றும் 2019 – 20–ஆம் ஆண்டிற்கு செலுத்த கோரப்பட்டுள்ளது, மேற்படி மாவட்ட சுற்றுச்சூழல் மற்றும் மாசுக்கட்டுப்பாட்டு வாரியம், திருவள்ளூர் அவர்கள் தெரிவித்துள்ள தொகை இரண்டு ஆண்டிற்கான கட்டணம் தொகை ரூ.87,200/–னை உரிய அறிவிப்பு கிடைக்கபெற்ற பின் செலுத்த மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு :–

1. மன்றம் அனுமதி வழங்கலாம்.
2. மாவட்ட சுற்றுச்சூழல் மற்றும் மாசுக்கட்டுப்பாட்டு வாரியம், திருவள்ளூர் அவர்களிடம் இருந்து அறிவிப்பு கடிதம் கிடைக்கபெற்ற பின் தொகையினை செலுத்த மன்றம் அனுமதி வழங்கலாம்.
(ந.க.எண்.163/2011/இ1)

**பொருள் எண்– 6**

திருத்தணி நகராட்சிக்கு சொந்தமான கீழ்கண்ட குத்தகை மற்றும் கடைகளுக்கு 27.08.2019ம் தேதியன்று மறுபொது ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டது. மேற்படி வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளி நடவடிக்கைகளின் விவரம் கீழ்கண்டவாறு.

| வ | குத்தகை இன விவரம் | ஒப்பந்தப்புள்ளி | ஒப்பந்தப்புள்ளி தொகை |
|---|---|---|---|

| எண் | | கோரியவரின் பெயர் | |
|---|---|---|---|
| 1 | பேருந்து நிலையத்தில் பேருந்து நுழைவு கட்டணம் வசூலிக்கும் உரிமம் | ஒப்பந்தப்புள்ளி மற்றும் பொது ஏலம் கோர யாரும் முன்வரவில்லை | |
| 2 | வார்டு எண்.13ல் புதியதாக கட்டப்பட்டுள்ள ஆட்டு இறைச்சி கூடத்தில் அறுக்கப்படும் ஆடுகளுக்கு சுங்கம் வசூல் செய்து கொள்ளும் உரிமை. | ஒப்பந்தப்புள்ளி மற்றும் பொது ஏலம் கோர யாரும் முன்வரவில்லை | |
| 3 | சன்னதி தெரு புதிய கடை எண்.2,3, 5, 7, 9 முதல் 14 வரை | ஒப்பந்தப்புள்ளி மற்றும் பொது ஏலம் கோர யாரும் முன்வரவில்லை | |
| 4 | காமராஜர் மார்கெட் புதிய கடை எண். 4 மற்றும் 7 | ஒப்பந்தப்புள்ளி மற்றும் பொது ஏலம் கோர யாரும் முன்வரவில்லை | |
| 5 | சன்னதி தெரு புதிய கடை எண். 8 | திரு.மனோகரன், எண்.64, அனுமந்தாபுரம் திருத்தணி | மாத வாடகை ரூ.2,000/– (வைப்பு தொகை ரூ.40,000/– DDNo.280090/20.08.19.) |

வரிசை எண்.1 முதல் 4 வரையில் உள்ள இனத்திற்கு மறு பொது ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளி கோர எவரும் முன்வரவில்லை. மறுபொது ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளி கோர மன்றம் அனுமதிக்கு.

வரிசை எண்.5ல் கண்டுள்ள குத்தகை இனத்திற்கு பல முறை பொது ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளி கோரியும் எவரும் கலந்து கொள்ளாத நிலையில் தற்போது மேற்படி கடைக்கு ஒரு ஒப்பந்தப்புள்ளி வரப்பட்டுள்ளது மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

<u>அலுவலக குறிப்பு</u> : -

1. வரிசை எண்.1 முதல் 4 வரை உள்ள இனத்திற்கு மறு பொது ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளி கோர யாரும் முன்வரவில்லை. மறுபொது ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளி கோர மன்றம் அனுமதிக்கலாம்.
2. வரிசை எண்.5 க்கு பலமுறை பொது ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டது. தற்போது வரப்பெற்ற ஒரே ஒப்பந்தப்புள்ளியை நகராட்சி வருவாய் இழப்பினை தவிற்கும் பொருட்டும், மற்ற கடை வாடகையை விட மாத வாடகை அதிகமாக உள்ளதாலும் வரப்பெற்ற ஒரே ஒப்பந்தப்புள்ளியினை ஏற்கலாம்.

(ந.க.எண்.1364/2015/அ1)

**பொருள் எண்– 7**

திருத்தணி நகராட்சி எல்லைக்குட்பட்ட வார்டு எண்.11 அரக்கோணம் சாலையில் உள்ள கல்யாண மண்டபம் சொத்துவதி விதிப்பு எண்.10510 க்கு அரையாண்டிற்கான வரி தொகை ரூ.42,653/– ஆகும். மேற்படி சொத்துவரி விதிப்பு திரு.டாக்டர்.எம்.ஸ்ரீகிரண் என்ற பெயரில் உள்ளது. தற்சமயம் இக்கட்டிடம் இடிக்கப்பட்டு காலிமனையாக உள்ளதால். காலிமனை வரி நிர்ணயம் செய்ய கோரிய மனுவின் மீது மேல் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டதில், மேற்படி இடத்திம்

பார்வையிடப்பட்டதில் கட்டிடம் முழுவதும் இடிக்கப்பட்டுள்ளதாலும், 2019–20 முதலாம் அரையாண்டு வரை சொத்துவரி செலுத்தப்பட்டுள்ளதால் சொத்துவரி விதிப்பை 2019–20 இரண்டாம் அரையாண்டு முதல் ரத்து செய்யவும், தற்போது காலியாக உள்ள சர்வே எண்.270/5A2, 271/10 மற்றும் 217/11A ல் 13516 சதுர அடிக்கு 2019–20 இரண்டாம் அரையாண்டு முதல் காலிமனை வரி நிர்ணயம் செய்யவும், இதனால் ஏற்படும் நிதியிழப்பிற்கு மன்றத்தின் அனுமதிக்காக.

<u>அலுவலக குறிப்பு</u> :-

1. சொத்துவரியை ரத்து செய்து காலிமனை வரி நிர்ணயம் செய்ய மன்றம் அனுமதிக்கலாம்.
2. காலிமனை வரி நிர்ணயம் செய்யப்படுவதால் ஏற்படும் நிதியிழப்பிற்கு மன்றம் அனுமதிக்கலாம்.

(ந.க.எண்.1088/2019/அ1)

**பொருள் எண்– 8**

இந்நகராட்சியில் கீழ்கண்ட பணிக்கு 29.08.2019 அன்று வரப்பெற்ற ஒப்பந்தப் புள்ளிகளின் ஒப்பு நோக்கு பட்டியல் மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

| வ.எண் | பணியின் பெயர் | மதிப்பீடு தொகை ரூ. இலட்சத்தில் | ஒப்பந்தப்புள்ளி விலை விகிதம் |
|---|---|---|---|
| 1 | டெங்கு காய்ச்சல் தடுப்பு பணிகள் மேற்கொள்ள பணியாட்களை சப்ளை செய்தல் | 30.00 | 1. திரு.கே.ஆறுமுகம், ஒப்பந்ததாரர் 31.22% மதிப்பீட்டை விட குறைவு |
| | | | 2. திரு.கே.வாசு, ஒப்பந்ததாரர் 30.94% மதிப்பீட்டை விட குறைவு |

நகராட்சி பொறியாளரின் குறிப்புரையில் மேற்கண்ட பணிக்கு வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் ஒப்பந்தப்புள்ளி விலை விகிதம் வரிசை எண்.1–ல் கண்டுள்ள திரு.கே.ஆறுமுகம் அவர்களின் ஒப்பந்தப்புள்ளியில் ரூ.249/– என விலை விகிதம் குறிப்பிடப்பட்டுள்ளது. வரிசை எண்.2–ல் கண்டுள்ள திரு.கே.வாசு அவர்களின் ஒப்பந்தப்புள்ளியில் ரூ.250/– என விலை விகிதம் குறிப்பிடப்பட்டுள்ளது. ஆனால் மாவட்ட ஆட்சியர், திருவள்ளூர் அவர்களின் 2018–19ம் ஆண்டு அனுமதிக்கப்பட்ட தினசரி ஊதியம் ரூ.362/– ஆக உள்ளது. மேற்படி விலை விகிதம் மாவட்ட ஆட்சித் தலைவர், திருவள்ளூர் அவர்களின் விலை விகிதத்தை விட குறைவாக இருப்பதால், மேற்கண்ட பணிக்கு வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளியினை ரத்து செய்திடவும், தற்சமயம் வடகிழக்கு பருவமழை காரணமாதலால் டெங்கு மற்றும் தொற்று நோய் பரவ ஏதுவாக சூழல் உள்ளதாலும், பொது சுகாதார நலன் கருதி மறு ஒப்பந்தப்புள்ளி கோரும் வரையில் தற்காலிகமாக மகளிர் சுய உதவிக்குழு உறுப்பினர்கள் மூலம் பணி மேற்கொள்ள மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

<u>அலுவலக குறிப்பு :–</u>

1. நகராட்சி பொறியாளரின் குறிப்புரையின்படி, மேற்கண்ட பணிக்கு வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளியினை ரத்து செய்திடவும், மறு ஒப்பந்தப்புள்ளி கோரும் வரையில் தற்காலிகமாக மகளிர் சுய உதவிக்குழு மூலம் பணி மேற்கொள்ள மன்றம் அனுமதி வழங்கலாம்.
2. ஒப்பந்ததாரர் செலுத்திய வைப்புத் தொகையினை திரும்ப வழங்க மன்றம் அனுமதி வழங்கலாம்.

(ந.க.எண்.191/2019/இ1)

**பொருள் எண்– 9**

இந்நகராட்சி எல்லைக்குட்பட்ட கீழ் கண்ட பகுதிகளில் நெடுஞ்சாலைத் துறையின்மூலம் மழைநீர் வடிகால்வாய் அமைத்தல் பணி மேற்கொள்ளப்பட்டு வருகிறது, மேற்படி வடிகால்வாய் அமைத்தல் பணிக்காக சாலையின் ஓரமாக பள்ளம் எடுத்தல் பணியின் போது இந்நகராட்சியின் குடிநீர் பிரதான குழாய்கள் தோண்டி எடுக்கப்பட்டது, அவ்வாறு தோண்டி எடுக்கப்பட்ட குடிநீர் பிரதான குழாய்களை மீண்டும் பயன்படுத்த இயலாத நிலையில் உள்ளது எனவே சட்ட மன்ற உறுப்பினர் அலுவலகம் முதல் சுவால் பேட்டை வரையும், காமராஜர் நாளங்காடி முதல் ஸ்டாலின் நகர் வரை மற்றும் வார்டு எண்.19 நேரு நகர் வரை ஆகிய இடங்களில் புதியதாக குடிநீர் பிரதான குழாய்கள் பதிக்க ஆகும் உத்தேச மதிப்பீட்டு தொகை ரூ.5.00 லட்சத்திற்கு மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு : –**

1. மன்றம் அனுமதி வழங்கலாம்
2. செலவினத்தை அனுமதிக்கலாம்

(ந.க.எண் : 191 / 2019 /இ1)

**பொருள் எண்– 10**

திருத்தணி நகராட்சி பகுதியில் டெங்கு காய்ச்சல் மற்றும் கொசுக்களின் மூலம் பரவக் கூடிய நோய்களை கட்டுப்படுத்தும் பணிக்கு 50 DBC பணியாளர்களை கொண்டு பணி மேற்கொள்ள சிவபார்வதி களஞ்சியம் மகளி சுய உதவிக்குழு, திருத்தணி அவர்கள் மாவட்ட ஆட்சியர், திருவள்ளூர் அவர்களின் 2018–19ம் ஆண்டு மஸ்தூர் பணிக்கான விலையில் பணி செய்ய சம்மதம் தெரிவித்து இசைவு கடிதம் அளித்துள்ளார். எனவே இந்நகராட்சி பகுதியில் டெங்கு காய்ச்சல் மற்றும் கொசுக்களின் மூலம் பரவக் கூடிய நோய்களை தடுப்பு நடவடிக்கை மேற்கொள்ளும் பணியினை மறு ஒப்பந்தப்புள்ளி கோரி நடவடிக்கை மேற்கொள்ளும் வரையிலான காலம் வரை, சிவபார்வதி களஞ்சியம் மகளிர் சுய உதவிக்குழு, திருத்தணி மூலம் நாள்தோறும் 50 DBC பணியாளர்களை கொண்டு பணிகள் மேற்கொள்ள மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு : –**

1. மன்றம் அனுமதி வழங்கலாம்.
2. சிவபார்வதி களஞ்சியம் மகளிர் சுய உதவிக்குழு மூலம் 50 DBC பணியாளர்களை கொண்டு பணி செய்யவும் அதற்கான செலவினத்தை மன்றம் அனுமதிக்கலாம்.

(ந.க.எண் : 957 / 2018 /எச்1)

**பொருள் எண்– 11**

இந்நகராட்சியில் கீழ்கண்ட பணிக்கு 21.08.2019 அன்று வரப்பெற்ற ஒப்பந்தப் புள்ளிகளின் ஒப்பு நோக்கு பட்டியல் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

| வ. எண் | பணியின் பெயர் | மதிப்பீடு தொகை | ஒப்பந்த புள்ளி விலை விகிதம் |
|---|---|---|---|
| 1 | திருத்தணி நகராட்சி வார்டு எண்.1 முதல் 7 வரையிலான பகுதியில் உள்ள பொது மக்களுக்கு தனியார் டிராக்டர் மூலம் குடிநீர் வழங்கும் பணி. | **10.00** | 1. திரு.கே.வாசு, ஒப்பந்ததாரர்<br>0.40 % மதிப்பீட்டை விட குறைவு<br>2. திரு.எம்.விஜயன், ஒப்பந்ததாரர்<br>2.00 % மதிப்பீட்டை விட அதிகம் |
| 2 | திருத்தணி நகராட்சி வார்டு எண்.8 முதல் 15 வரையிலான பகுதியில் உள்ள பொது மக்களுக்கு தனியார் டிராக்டர் மூலம் குடிநீர் வழங்கும் பணி. | 10.00 | 1. திரு.கே.வாசு, ஒப்பந்ததாரர்<br>0.40 % மதிப்பீட்டை விட குறைவு<br>2.திரு.எம்.விஜயன், ஒப்பந்ததாரர்<br>2.00 % மதிப்பீட்டை விட அதிகம்<br>3. திரு.கே.ஆறுமுகம், ஒப்பந்ததாரர்<br>2.50 % மதிப்பீட்டை விட அதிகம் |
| 3 | திருத்தணி நகராட்சி வார்டு எண்.16 முதல் 21 வரையிலான பகுதியில் உள்ள பொது மக்களுக்கு தனியார் டிராக்டர் மூலம் குடிநீர் வழங்கும் பணி. | 10.00 | 1. திரு.கே.வாசு, ஒப்பந்ததாரர்<br>0.40 % மதிப்பீட்டை விட குறைவு<br>2. திரு.எம்.விஜயன், ஒப்பந்ததாரர்<br>2.00 % மதிப்பீட்டை விட அதிகம் |

**அலுவலக குறிப்பு :–**

1. மேற்படி வரிசை எண்.1 முதல் 3 வரை உள்ள பணிகளுக்கு வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளில் குறைந்த ஒப்பந்தப்புள்ளி அளித்துள்ள திரு.கே.வாசு, ஒப்பந்ததாரருக்கு பணி உத்தரவு வழங்க மன்றம் அனுமதி வழங்கலாம்.
2. செலவினத்தை அனுமதிக்கலாம்.
   (ந.க.எண்.191/2019/இ1)

**பொருள் எண்– 12**

நகராட்சி பகுதியில் உள்ள குடிநீர் குழாய்களை 2019–20–ம் ஆண்டிற்கு பராமரிப்பு பணிக்கு உத்தேச மதிப்பீட்டு தொகை ரூ.9.90 லட்சத்திற்கு மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு :–**

1. மன்றம் பதிவு செய்யலாம்.
2. செலவினத்தை அனுமதிக்கலாம்.
   (ந.க.எண்.191/2019/இ1)

**பொருள் எண்– 13**

அரக்கோணம் திருத்தணி கூட்டு குடிநீர் திட்டம் மூலம் அரக்கோணம் நீறுந்து நிலையத்திலிருந்து இந்நராட்சி பகுதியில் உள்ள காந்திஜி நூற்றாண்டு நினைவு மேல்நிலை நீர்தேக்க தொட்டிக்கு நாள்தோறும் குடிநீர் ஏற்றப்பட்டு நகராட்சி பகுதியில் உள்ள பொது மக்களுக்கு குடிநீர் விநியோகம் செய்யப்பட்டு வருகிறது, மேற்படி இந்நகராட்சி நாள்தோறும் வழங்கம் குடிநீரின் அளவினை அளக்கும் அளவு மானியானது பழுதடைந்துள்ளதால் இந்நகராட்சிக்கு பெறப்படும் குடிநீரின் அளவு கணக்கிட முடியாத சூழல் உள்ளது, எனவே அரக்கோணம் நீறுந்து நிலையத்திலிருந்து வரும் குடிநீர் பிரதான 200MM CI Pipe–ல் இந்நகராட்சி பகுதியில் அமைந்துள்ள காந்திஜி நூற்றாண்டு நினைவு மேல்நிலை நீர்தேக்க தொட்டியில் அளவு மானி பொருத்தும் பணிக்கு ஆகும் உத்தேச மதிப்பீட்டு தொகை ரூ.0.60 லட்சத்திற்கும், மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்பிடுகிறது.

**அலுவலக குறிப்பு :–**

1. மன்றம் அனுமதி வழங்கலாம்.
2. செலவினத்தை அனுமதிக்கலாம்.

(ந.க.எண்.191/2019/இ1)

**பொருள் எண்– 14**

இந்நகராட்சி பொது சுகாதர பிரிவில் இயங்கும் கீழ் கண்ட வாகனங்களுக்கு 2019–20 (ம) 2020–21–ஆம் ஆண்டுகளுக்கு, தகுதி சான்று (FC), சாலை வரி (Road Tax) மற்றும் பசுமை வரி (Green Tax) ஆகியவைகள் செலுத்த மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

1. TN 20AD 6402 பொலிரோ வாகனம்
2. TN 20BA 3405 அசோக் லைலாண்டு லாரி
3. TN 20B 9437 அசோக் லைலாண்டு லாரி
4. TN 20 BJ 3224 பொலிரோ வாகனம்
5. TN 20BJ 6548 TATA Ace
6. TN 20CA 4542 Eicher
7. TN 20CA 9016 Compactor
8. TN 20 C 7968 Tractor
9. TN 20 CD 2196 TATA Ace (Dog Traveling Vehicle)

**அலுவலக குறிப்பு : –**

செலவினத்தை பொது நிதியில் மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.
(ந.க.எண்.2341/2018/இ1)

**பொருள் எண்– 15**

இந்நகராட்சி பொது சுகாதரம் மற்றும் பொது பிரிவில் இயங்கும் கீழ் கண்ட வாகனங்களுக்கு 2019–20 (ம) 2020–21–ஆம் ஆண்டுகளுக்கு காப்பீட்டு தொகை செலுத்த மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

1. TN 20AD 6402 பொலிரோ வாகனம்
2. TN 20BA 3405 அசோக் லைலாண்டு லாரி
3. TN 20B 9437 அசோக் லைலாண்டு லாரி

4. TN 20 BJ 3224 பொலிரோ வாகனம்
5. TN 20BJ 6548 TATA Ace
6. TN 20CA 4542 Eicher
7. TN 20CA 9016 Compactor
8. TN 20 C 7968 Tractor
9. TN 20 CD 2196 TATA Ace (Dog Traveling Vehicle)

**அலுவலக குறிப்பு –**

காப்பீட்டு நிறுவனம் நிர்ணயிக்கும் தொகையினை செலுத்த மன்றம் அனுமதிக்கலாம்.
(ந.க.எண்.2341/2018/இ1)

**பொருள் எண். 16**

இந்நகராட்சி எல்லைக்குட்பட்ட பகுதியில் அமைந்துள்ள நல்லதண்ணீர் குளத்தினை மறு சீரமைப்பு பணிமேற்கொள்ள ரூ.150.00 லட்சம் நிதி ஒதுக்கீடு செய்து சுற்றுச் சூழல் மற்றும் வனத்துறை அரசாணை எண்.112 நாள்.22.05.2018–ல் அரசாணை வெளியிடப்பட்டது, மேற்கண்ட பணிக்கு 10.10.2018 அன்று ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டு குறைந்த ஒப்பந்தப்புள்ளி அளித்த ஒப்பந்ததாருக்கு 12.11.2018 அன்று பணி உத்திரவு வழஙகப்பட்டு பணி நடைபெற்று வருகிறது. மேற்படி நகராட்சி பொறியாளரின் குறிப்புரையின் படி பணி நடைபெறும் போது மாண்புமிகு சட்ட மன்ற உறுப்பினர் அவர்கள் மற்றும் பொது மக்கள் நல்ல தண்ணீர் குளத்தினை தூர்வாரி ஆழப்படுத்தும்படி (RWH) தெரிவித்தனர், அதன் பேரில் நகராட்சி பொது நிதியில் ஆழப்படுத்தும் பணி மேற்கொள்ளப்பட்டது, மேற்படி தொழில்நுட்ப அனுமதி வழஙகப்பட்ட மதிப்பீட்டில் குளத்தின் ஆழம் சராசரியாக 2.00 மீட்டர் என கணக்கிடப்பட்டது. தற்போது தூர்வாரி ஆழப்படுத்தியதால் சராசரியாக 4.00 மீட்டர் முதல் 7.00 மீட்டர் வரை ஆழம் உள்ளது. எனவே பணி மேற்கொள்ளும் போது மதிப்பீட்டைவிட கூடுதலான அளவீடு மேற்கொள்ளப்பட்டது. எனவே மதிப்பீடில் LS-ல் தொகை உள்ளதால் மதிப்பீட்டு தொகைக்கு மிகாமல் பணி செய்து முடிக்க மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு : -**

1. மன்றம் அனுமதி வழங்கலாம்.
2. நகராட்சி பொறியாளரின் குறிபுரையின்படி மதிப்பீட்டிற்கு மிகாமல் குளத்தினை ஆழப்படுத்தும் பணி மேற்கொள்ள மன்றம் அனுமதி வழங்கலாம்.
   (ந.க.எண்.997/2017/இ1)

**தனி அலுவலர் (ம) ஆணையர்**
**திருத்தணி நகராட்சி**